மலர் : 12
இயேசுகிறிஸ்துவே கர்த்தர்
இதழ் : 9
TVGM
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विल्लज मिनिस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஜுலை 2012

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2012 ஜுலை**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன்.

எரேமியா 29 : 10.



உத்திரமேரூர் யூனியனிலுள்ள **கிழக்காடி** கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஜெபவீடு



ஒட்டன்சத்திரம் அருகிலுள்ள **பால்கடை** கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஜெபவீடு

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்






**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TASOL ஸ்தாபகர்
**Cell : 94449 80445**
100village@tvgm.org

**P.T. கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**
jesus100villages@yahoo.com


*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே !*

*நம் இரட்சகரான இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.*

*கர்த்தருடைய கிருபையால் TVGM மற்றும் TASOL ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது.*

*தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் ஏழு ஜெபவீடுகள் கட்டப் பட்டு வருகின்றன. இந்த மாதத்தில் ஐந்து ஜெபவீடுகள் பிரதிஷ்டை செய்ய உள்ளோம். இந்த ஜெபவீடுகளின் கட்டுமான பணிகள் முடிக்கப் பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.*

*100-கிராம ஊழியம் தரிசன முகாம் மார்த்தாண்டம் - நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் 26.06.2012 அன்று தேவநாம மகிமைக் கென்று நடைபெற்றது. அநேகர் இந்த முகாமின் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டனர்.*

*திருச்சியிலுள்ள ஏலீம் சிறுவர் இல்லத்திற்கு நூலகம் கட்டி கொடுக்கும் சகோ. மைக்கேல் ( யூ.கே) அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*பாஸ்டர் விவேகானந்தம் (பிரான்ஸ்) TVGM ஊழியங்களை பார்வையிட்டு, எங்களை ஊக்குவித்தார்கள்.*

*உங்கள் சபைகளிலும், கூட்டங்களிலும், நாங்கள் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள விரும்பும் போதகர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். எங்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.*

*தேவனுக்கே மகிமை !*

**Date : 14.06.12**

*கிறிஸ்துவின் பணியில்,*
*ஸ்டீபன் கிறிஸ்டோபர்.*

# உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன்.

**எரேமியா 29 : 10**

**இ**ந்த மாத வாக்குத்தத்தத்திற்காக காத்திருக்கும் கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

தேவன் இந்த மாதத்தில் உங்களுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம் : **எரேமியா 29:10**

**உங்கள்மேல்**
**என் நல்வார்த்தையை**
**நிறைவேறப்பண்ணுவேன்.**

ஆம்! கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். அடுத்த வசனம் இவ்வாறு கூறுகிறது, ''நீங்கள் எதிர் பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவு களை அறிவேன் என்று கர்த்தர் சொல் லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவு களே''(எரே.29:11).

ஆம்! கர்த்தருக்கு பிரியமான வர்களே, நீங்கள் எந்த சூழ்நிலையில் காணப்பட்டாலும், தேவன் அவர் கொடுத்த வாக்குத்தத்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்றி உங்களுக்கு சமாதானம் வரப் பண்ணுவார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

இதன் பின்னணியை நாம் பார்த்தால், இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போன காலத்தில் இந்த வசனம் எழுதப்பட்டி ருக்கிறது. 70 வருடங்கள் நிறை வேறினபின்பு அவர்களை திரும்பி வரப் பண்ணுவதாக வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் அதை நிறைவேற் றுகிறார். கர்த்தர் நம் வாழ்க்கையில் இருந்தால், தீமையான காரியங்களை கூட நமக்கு நன்மையாக மாற்றுவார். கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின காரியத்தை நிச்சயமாகவே நிறை வேற்றுவார்.

யூதர்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போன காலத்தில் எரேமியா தீர்க்கதரிசனம் உரைக்கிறார். அவர் பொய்யான தீர்க்கதரிசிகளையும், குறிகாரரையும், சொப்பனக்காரரையும் நம்ப வேண்டாம் என எச்சரிக்கிறார். இந்த கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு உண்டாகப் போகும் நியாயத் தீர்ப்பையும் எரேமியா தீர்க்கதரிசனமாக உரைக்கிறார்.

வேதாகமத்தில் அநேக இடங் களில், கர்த்தர் தம் பிள்ளைகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணின காரியங் களை நிறைவேற்றுவதைக் காணலாம். வாக்குத்தத்தம் நிறைவேற தாமதித் தாலும் அது நிச்சயமாக நிறைவேறு வதைப் பார்க்கலாம்.

ஆபிரகாமை பற்றி வாசிக்கும் போது அவனுக்கு ஆரம்பத்தில் குழந்தை பாக்கியம் இல்லை என்று பார்க்கலாம். ஆனால் கர்த்தர் அவனை

தன் ஊழியத்திற்கு அழைத்தபோது அவனுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை கொடுக்கிறார். ஆதி.12 : 2 **“நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து....**” கர்த்தர் அவனை பெரிய ஜாதியாக்குவேன் என வாக்குத்தத்தம் பண்ணின பிறகும், கர்த்தருக்குச் சித்தமில்லாத காரியத்தை செய்து ஆகார் மூலமாக இஸ்மவேலை பெற்றான். ஆனால் கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணினபடி அவர் ஈசாக்கை கொடுத்து, சாராள் மூலமாக அவன் சந்ததியை வர்த்திக்கப் பண்ணுகிறார்.

கர்த்தர் யோசேப்புக்கு ஒரு சொப்பனத்தை கொடுத்தார். அதில் அவனுடைய குடும்பம் முழுவதும் யோசேப்பை வணங்குகிறதுபோல கண்டான். ஆதி.37:5–10ல் இதை வாசிக்கலாம்– “நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான்.” அவன் இந்த சொப்பனத்தை சொன்னபோது அவன் சகோதரர்கள் அவனை இன்னும் அதிகமாய் பகைத்தார்கள். அவனை கொலை செய்ய வகைத் தேடினார்கள். அநேக வருடங்களுக்கு பிறகு தான் கர்த்தர் யோசேப்புக்கு வைத்திருந்த திட்டமும், வாக்குத்தத்தமும் நிறைவேறியது.

ஆம்! கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே! கர்த்தர் நம் வாழ்க்கைக்கு வாக்குத்தத்தங்களை கொடுக்கிறார். அதை குறித்து மற்றவர்கள் சிரிக்கலாம் அல்லது நம்மை குறைவாக பேசலாம். நம் வாழ்க்கையில் கர்த்தருடைய சித்தத்தை அழிக்க சாத்தான் முயற்சி செய்வான். ஆனால் கர்த்தருடைய வாக்குத்தத்தம் தாமதித்தாலும் அது நிச்சயமாகவே நிறைவேறும். கர்த்தர் நமக்கு வைத்திருக்கும் திட்டங்களை யாராலும் அழிக்க முடியாது.

**கர்த்தருடைய வாக்குத்தத்தம்**
**நம் வாழ்வில் நிறைவேற**
**நாம் செய்ய வேண்டிய காரியங்கள் !**

**1.கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை / வார்த்தையை நம்ப வேண்டும்.**

**2. கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேற பொறுமையாக காத்திருக்க வேண்டும்.**

**3. எல்லா மகிமையும் கர்த்தர் ஒருவருக்கே செலுத்த வேண்டும்.**

முதலாவதாக, கிறிஸ்தவர்களாகிய நாம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்ப வேண்டும். நோவாவை பற்றி வாசிக்கும்போது, அவன் நீதிமானாயிருந்து கர்த்தரை நம்பி, அவருக்கு முழுமையாக கீழ்படிந்தான் என்று பார்க்கலாம். கர்த்தர் நோவாவை நோக்கி ஒரு பேழையை உண்டாக்க சொன்னார். நோவா கர்த்தரை விசுவாசித்து அவர் சொன்னபடியே செய்தான். அதனால் தான் கர்த்தர் அவருடைய திட்டங்களை நிறைவேற்ற முடிந்தது. ஆதலால் நாம் கர்த்தரை நம்பி முழுமையாக கீழ்படிய வேண்டும்.

அநேக நேரங்களில், கர்த்தர் நமக்கு கொடுக்கும் கட்டளைகளும், வாக்குத்தத்தங்களும் நம்முடைய

நடைமுறை வாழ்க்கைக்கு சம்பந்தம் இல்லாதது போன்று தெரியும். நாம் அது கண்டிப்பாக நடக்காது என்று எண்ணலாம். அவருடைய திட்டத்தை செய்ய நமக்கு தகுதி இல்லை என நினைக்கலாம். ஆனால் கர்த்தரின் வார்த்தையை நம்பி அதை முக்கிய மான ஒன்றாக கருத வேண்டும். அப்படி செய்தால் நம் வாழ்க்கையில் அவர் வார்த்தைகளை அற்புதமாக நிறைவேற்றுவார். நாம் செய்ய வேண்டியது சரியான பாதையில் நடந்து அவருக்கு கீழ்படிய வேண்டும்.

இரண்டாவதாக, கர்த்தருடைய வாக்குத்தத்தம் நம் வாழ்க்கையில் நிறைவேற பொறுமையாக காத்திருக்க வேண்டும். நாம் வேதத்திலே யோபை குறித்து படிக்கும்போது அவருடைய பொறுமையும், காத்திருத்தலும் நம்மை நெகிழ செய்கிறது. அவனுடைய மனைவி கூட தேவனை தூஷித்து சாகு என்று சொன்னபோதும் யோபு பொறுமையாய் காத்திருந்தார். யோபு 2:9ல் அவர் மனைவி இவ்வாறு கூறுகிறார் "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்".

ஆகவே யோபுவை போன்று பொறுமையாக இருந்து கர்த்தர் நமக்கு வைத்திருக்கும் திட்டம் நிறைவேறும் வரைக்கும் காத்திருக்க வேண்டும். சாத்தான் கொண்டு வரும் சோதனை களில் சிக்கிக் கொள்ளாதீர்கள். கர்த்தர் நம் வாழ்வில் அவர் திட்டத்தை நிறைவேற்றும் வரைக்கும் பொறுமை யாக காத்திருங்கள்.

மூன்றாவதாக, கர்த்தர் ஒருவருக்கே எல்லா மகிமையையும் செலுத்துங்கள். அநேக நேரங்களில் நாம் வெற்றி பெறும் வரைக்கும் மட்டும் கர்த்தரை பற்றிக் கொள்கிறோம். வெற்றி பெற்ற பின்பு அவரை மறந்து நம்முடைய சுயத்தால் தான் சாதித்தோம் என்ற பெருமை வந்து விடும். அதனால் நாம் எல்லாவற்றிலும் ஜாக்கிரதையாய் இருந்து அவருக்கு மட்டுமே கனத்தையும், மகிமையையும் செலுத்த வேண்டும். கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழ்த்த வேண்டும்.

மேற்சொன்ன காரியங்களை செய்தால் கர்த்தர் நம்மேல் பிரியமா யிருந்து, வெற்றிக்கு மேல் வெற்றியை தருவார். எந்த மனிதரும் கர்த்தர் நமக்கு கொடுக்கும் வெற்றியை தடை பண்ண முடியாது.

**பக்தன் பாடுகிறார் . . .**

**வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே**
**வாக்குமாறா உண்மை நாதரே**
**வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்**
**வல்ல ஆவி மாரி ஊற்றுமே**

ஆம்! இந்தப் பாடலை பாடிக் கொண்டே வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**நான் கர்த்தரை முழு இருதயத்தோடு நம்புவேன். அவருடைய வாக்கையும், திட்டத்தையும் என் வாழ்வில் நிறைவேற்றுமளவும் காத்திருப்பேன். அவரை மட்டுமே மகிமைப்படுத்துவேன்.**

**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## சேலம் மாவட்டம் - அயோத்தியா பட்டணம் யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2012 ஜுலை 16** திங்கள் காலை 9 மணி முதல் **ஜுலை 20** வெள்ளி இரவு 10 மணி முடிய **அயோத்தியா பட்டணம் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2012 ஜுலை 16** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2012 ஜுலை 20** வெள்ளி இரவு **7 - 10** மணி

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் -** TVGM

C/o. **பெத்தேல் சுவிசேஷ அசெம்பிளி**

**86 / 13 , அரூர் மெயின் ரோடு,**

**அயோத்தியா பட்டணம் போஸ்ட்,**

**சேலம் - 636 103. செல் :** 93611 02911

உதவி செய்ய முன்வந்த **பாஸ்டர் M. செல்லையா** அவர்களுக்கு நன்றி.

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

***பிரயாணப்படி* :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, **அனுமதி தபால்** பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

***முக்கிய அறிவிப்பு* :** 1. இது ஒரு கெளரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,

**100 - கிராமம்,** சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102. **Web: tvgm.org**

***தேவை* :** ஒரு மாதம் *10,000* வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க ரூ.75000 தேவைப்படுகிறது. கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் தாங்க முன்வாருங்கள்.

# திருச்சி மாவட்டம் - மணிகண்டம் யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

## தேதி : 30.04.2011 முதல் 05.05.2011 முடிய



கர்த்தருடைய கிருபையினால் திருச்சி மாவட்டம் – **மணிகண்டம்** யூனியனில் 30.04.2012 திங்கள் முதல் 05.05.2012 சனி வரை **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், இரண்டாம் நாள் கூடுமிடம், உணவு TVGM மூலம் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 38 கிராம ஊழியர்கள் கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் மணிகண்டம் யூனியனிலுள்ள கிராமங்களுக்காக ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் **சகோ.நெல்லைகுமார்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.

இதன்பின் கிராம ஊழியர்களை 10 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். இரவில் TVGM தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நடுஇரவு ஜெபத்திலும், திருவிருந்திலும் கலந்து கொண்டார்கள். அடுத்த நாள் TVGM 33வது ஆண்டுவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. கிராம ஊழியர்கள் இதிலும் கலந்து கொண்டார்கள். சேலம் JMHA பாஸ்டர் ஜோசப் அவர்கள் கிராம ஊழியர்கள் தியாகத்தோடு ஊழியம் செய்யவேண்டுமென்று பிரசங்கித்தார்கள்.



மே 2ம் தேதி அதிகாலையில் 10 குழுவினரும் கிராமங்களுக்குள் கடந்து சென்று வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகங்களை கொடுத்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் 10,110 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 10,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள், 10000 சிலுவைக்கொடிகள், 1000 **'நம் மத்தியில் வாழ்ந்த அவர்'** புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டன. **185** புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

ஊழியங்களை முடித்து யாவரும் திருச்சி – ஒரேப் ஜெபவீட்டில் கூடி ஜெபித்து கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஒரேப் சபையின் **பாஸ்டர் ஜெயபால்** அவர்கள் தேவசெய்தியளித்து , அனைவருக்கும் மதியவிருந்தும், இனிப்பு பாக்கெட்டுகளும் கொடுத்து உபசரித்தார்கள். TVGM சார்பில் பிரயாணப்படி வழங்கப்பட்டது. இதன் பின் யாவரும் மகிழ்ச்சியோடு அவரவர் ஊர்களுக்கு திரும்பி சென்றார்கள்.




## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 :- சகோதரி வசந்தா ஸ்டீபன், சகோதரி அன்னக்கிளி,சகோதரி மெர்சி, சகோதரி கவிதா.**

**அதவத்தூர், பள்ளக்காடு, கொய்யாத்தோப்பு** கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். யாவரும் சந்தோஷமாக வாங்கி சுவிசேஷத்தைக் கேட்டார்கள். பலர் தங்கள் கவலைகளை சொல்லி ஜெபிக்கும்படி கேட்டார்கள்.ஒரு அம்மாவிடம் சுவிசேஷம் சொன்னபோது நாங்கள் காட்டிற்குள் பிள்ளைகளுடன் வசிக்கிறோம். எந்த தீயசக்திகளும் அணுகாமல் இயேசு பாதுகாக்க ஜெபியுங்கள் என்றார்கள். இயேசுவின் நாமத்தையும் அவருடைய இரத்தத்தையும் சொல்லுங்கள் என்று சொல்லிக் கொடுத்து ஜெபித்தோம். மொத்தம் 1095 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 :- சகோதரி பிச்சையம்மாள், சகோதரி எஸ்தர் எபிநேசர், சகோதரி செல்லக்கனி, சகோதரி கிளமெண்ட்ஸ்மேரி**

**சோமரசம்பேட்டை** ஊராட்சியிலுள்ள வீடுகளில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். அக்ரஹாரம் பகுதியில் ஒரு அய்யரிடம் புத்தகம் கொடுத்தபோது, போய்விடுங்கள் எல்லா புத்தகங்களையும் பிடுங்கி குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவேன் என்றார். இவர் வீட்டிற்கு எதிரே இருந்த ஒரு மாமியிடம் புத்தகம் கொடுத்தோம். அவர் சந்தோஷமாக வாங்கிக் கொண்டு, இன்னமும் புத்தகங்கள் அனுப்புங்கள் என்றார். வெயிலில் அலைந்த களைப்பால் ஒரு தென்னை மர நிழலில் நின்றோம். சிறிது நேரத்தில் மரத்திலிருந்து ஒரு தேங்காய் உங்களை உரசியபடி விழுந்தது. கர்த்தர் எங்களை காப்பாற்றினார். மொத்தம் 1400 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 :- சகோ. யோசுவா, சகோ.பீட்டர் ராமலிங்கம், சகோ. ஜெபமலைநாதன், சகோ. செல்வராஜ்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் சுவிசேஷப் புத்தகங்களை சந்தோஷமாக வாங்கினார்கள். மூன்று நாட்களும் கர்த்தர் எங்களோடிருந்து உதவி செய்தார். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 :- சகோதரி லூயிஸ் அம்மாள், சகோதரி மணியம்மாள், சகோதரி கிருபா பழனியம்மாள், சகோதரி ரெபேக்கா.**

**இனாம்மாத்தூர்** கிராமத்தில் ஒரு அம்மா தன் மகனுக்கு இருதயத்தில் ஓட்டை இருந்ததால் ஆப்பரேஷன் செய்தார்கள் அந்த இடத்தில் பழுத்து விட்டது ஜெபியுங்கள் என்று துக்கத் தோடு சொன்னார்கள். நாங்களும் அந்த மகனுக்காக கண்ணீரோடு ஜெபித்தோம். இதுபோல **சூறாவளிப்பட்டி, யாகப் புடையான்பட்டி** கிராமங்களில் அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 :- சகோதரி கஸ்தூாி சுப்பையா, சகோதரி மேரி மீனா, சகோதரி மரியாள்**

**மணிகண்டம்** ஊராட்சியிலுள்ள 10 கிராமங்களில் ஊழியம் செய்தோம். **எசனப்பட்டி**யில் ஒருவர் எங்களை இந்த ஊரைவிட்டு ஓடிப் போய் விடுங்கள் என்றார். நாங்கள் அந்த ஊர் முழுவதும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து விட்டு, அடுத்த கிராமத்திற்கு சென்றோம். சிலர் தங்கள் பிரச்சனை, வியாதிக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். மொத்தம் 850 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 :- சகோ.பால்ராஜ், சகோ.ஜோசப் தார்சீஸ், சகோ. அந்தோணி, சகோ. ஆபிரகாம்.**

நாங்கள் சென்ற கிராமத்தில் ஒருவர் மட்டும் மதமாற்றம் செய்ய வந்தீர்களா, ஓடிப் போங்கள் என்றார். அந்த நபரைத் தவிர மற்ற எல்லோருக்கும் சுவிசேஷம் சொல்லி மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 :- சகோ.பிரேம் ஆனந்த், சகோ. சவரிமுத்து, சகோ. நோவா ஆண்டியப்பன்.**

**பூங்குடி** கிராமத்தில் ஊர் திருவிழா நடந்து கொண்டிருந்தது. ஆடி வெட்டி பலி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இவர்களில் சிலரை சந்தித்து **மனிதனின் பாவத்திற்காக இயேசு ஒருவரே சிலுவையில் இரத்தம் சிந்தி பலியானார்** என்று வேத வசனத்தை எடுத்துக்காட்டி சொன்னபோது அவர்கள் ஆடு பலி கொடுப்பது கும்பிடுவது தேவை யற்ற ஒன்று என்பதை உணர்ந்து கொண்டார்கள். அநேகர் கிறிஸ்தவ சபைக்கு வருவதாகச் சொன்னார்கள். வியாதிபட்ட மக்கள் அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 925 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 :- சகோதரி சாந்தகுமாரி, சகோதரி சாரதா, சகோதரி தெபோராள், சகோதரி லீலா.**

நாங்கள் 9 கிராமங்களில் யோவான் சுவிசேஷப் புத்தகம், கைபிரதிகள் கொடுத்து ஊழியம் செய்தோம். ஒருவர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தார். மற்ற யாவரும் பயபக்தியுடன் புத்தகங்களை பெற்றுக் கொண்டார்கள். **குன்னத்துார்** கிமாத்தில் 10ம் வகுப்பு படித்த ஒரு வாலிப னுக்கு திடீரென்று கை,கால்கள் செயலிழந்து ஊமையாகி வீட்டில் இருந்தான். இவனுக்காக ஜெபித்து இவனுடைய பெற்றோர்களுக்கு இயேசுவைப் பற்றி கூறி சர்ச்சுக்கு போங்கள் இயேசு சுகம் தருவார் என்றோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 9 :- சகோ. மாற்கு மாரியப்பன்,
சகோ. சூசைமாணிக்கம்,
சகோ.தாஹாகனி, சகோ. மகாராஜன்.

நாங்கள் கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்தபோது, அநேகர் சந்தோஷமாக வாங்கினார்கள். ஒரு சிலர் மட்டும் வாங்க விரும்பவில்லை. வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 10 :- சகோதரி எஸ்தர் சாலமோன்,
சகோதரி எஸ்தர் கனகாம்புஜம்,
சகோதரி தேவபாக்கியம்,
சகோதரி ஜோதிமணி

**கோப்பு** என்ற கிராமத்தை மையமாக வைத்து சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்தோம். மக்கள் ஆர்வமுடன் ஏற்றுக்கொண்டனர். அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1140 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

**2012 ஜுலை மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : நாமக்கல்
யூனியன் : பள்ளிபாளையம்
நாள் : 21.07.2012
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

பாஸ்டர் ஜான் ஒயிட்
சாலோம் ஜெபவீடு
குமாரபாளையம் மெயின்ரோடு
அக்ரஹாரம், பள்ளிபாளையம்,
நாமக்கல் மாவட்டம்.
செல் : 97872 46115
99432 81640

## TVGM அறிமுகப்பணி அலுவலகம் நாகர்கோவில் 2012 மே மாத ஊழியஅறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மே மாத ஊழியங்கள் தடையின்றி நடந்து முடிந்தன. கர்த்தர் எங்களை பெலப்படுத்தி, குறைந்த நாட்களில் அநேக பகுதிகளை சந்தித்து ஊழியங்களை நிறைவேற்ற கிருபை செய்தார்.

மே 26 சனிக்கிழமை அன்று மார்த்தாண்டம் – நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் வைத்து 100–கிராம ஊழிய தரிசன முகாம் நடத்த கர்த்தர் கிருபை செய்தார்.

சிதம்பரபுரத்தில் மே மாதம் அறிமுகப்பணி செய்ய கர்த்தர் வழியை திறந்தார். சுவிசேஷ ஊழியம் செய்த பகுதியிலும் திறந்த வாசலை தந்தார்.

**தேவனுக்கே மகிமை !**

கிறிஸ்துவின் பணியில்,
N. ஷோபனா இவாஞ்ஜலின்
செல்: **98658 26424**

**TVGM**
**அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001
கன்னியாகுமரி மாவட்டம்.
போன் : 04652 - 277251

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

*பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.*

## கடித ஊழியத்தின் மூலம் கர்த்தர் செய்த நன்மைகள் !

**சகோ. சேகர், திருவண்ணாமலை.**

என் திருமணத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார். திருமணம் ஆசீர்வாதமாக முடிந்தது.

**சகோதரி ரேணுகா, திருச்சி.**

என் சம்பள உயர்வுக்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு எனக்கு சம்பள உயர்வை கட்டளையிட்டார்.

## பத்திரிகை ஊழியத்தின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டோர் எழுதிய கடிதங்களின் சில வரிகள் !

**சகோதரி மல்லிகா, நெல்லை**

2012 பிப்ரவரி மாத ''100–கிராம ஊழியம்''பத்திரிகையில் வெளிவந்த **"இனி அழுது கொண்டிராய்"** என்ற வசனம் என் அத்தையை பறிகொடுத்து விட்டு அழுது கொண்டிருந்த எனக்கு இனி மேல் அழவேண்டாம், நான் இருக்கிறேன் என்று கர்த்தர் வாக்குக்கொடுத்தது போல் இருந்தது.

**சகோ. செல்வநாதன், தஞ்சாவூர்.**

உங்களின் மாதஇதழ் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. அதில் வரும் வாக்குத்தத்தங்கள் மிகவும் படிப்பதற்கு பயனுள்ளதாக இருக்கிறது.

**சகோ.கணேசன், சிவகங்கை**

நீங்கள் அனுப்பும் ''தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்'' பத்திரிகையின் மூலம் மிகவும் சந்தோஷமடைகிறேன்.

**சகோதரி வெண்ணிலா, புதுகை**

ஒவ்வொரு மாதமும் நீங்கள் அனுப்பும் மாதஇதழை படிக்கும்போது எனக்கு ஆறுதலாக இருக்கிறது.

**சகோதரி அனுசுயா, திருச்சி**

நீங்கள் அனுப்பும் மாதாந்திர பத்திரிகையில் வரும் வசனம் தான் வாழ்க்கைக்கு பெலனாக உள்ளது.

**சகோதரி பிரேமா, விருது நகர்,**

நீங்கள் அனுப்பும் ''தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்'' பத்திரிகை மிகவும் பிரயோஜனமாக உள்ளது.

### பத்திரிகை ஊழியம்

ஒவ்வொரு மாதமும் விசுவாசிகளுக்கென்று **"100–கிராம ஊழியம்"** என்ற பத்திரிகையும், புறமத நண்பர்களுக்கென்று **"தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்"** என்ற பத்திரிகையும் வெளியிடப்பட்டு வருகிறது. இந்த பத்திரிகையின் மூலம் ஆசீர்வதிக்கப் படுவோர் அநேகர். ஒவ்வொரு மாதமும் பத்திரிகை வெளியிடுவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

## இயேசுகிறிஸ்துவே கர்த்தர் !

## இந்திய அரசாங்க சட்டத்தின்படி கிறிஸ்தவ சபைகள் பராமரிக்க வேண்டிய 15 ரிஜிஸ்டர்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையினால் 14.06.2012 அன்று TVGM தலைமை அலுவலகம், 100–கிராமம், சோமரசம்பேட்டை, திருச்சியில் பாஸ்டர் Fellowship நடத்தும் தலைவர்கள் மற்றும் கிளை சபைகள் வைத்திருக்கும் சபை தலைவர்களுக்கு "**இந்திய அரசாங்க சட்டத்தின்படி கிறிஸ்தவ சபைகள் பராமரிக்க வேண்டிய 15 ரிஜிஸ்டர்கள்**"பற்றி குறைந்தபட்சம் 25 பேர்களுக்காவது சொல்லிக் கொடுப்பதற்கு ஒரு கலந்துரையாடல் வைத்திருந்தோம்.

என்னுடைய நண்பர் பாஸ்டர் விவேகானந்தன் மூலமாக TVGM க்கு இரண்டு வாரங்களுக்கு முன் அறிமுகமான Rev.Dr. Thomas Jaison 'Mould' சென்னை அவர்கள் மூலமாக இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

எந்தவித விளம்பரமும் எழுத்தின் மூலம் கொடுக்கப்பட நேரம் இல்லை. பாஸ்டர் கைவல்யம் மற்றும் TVGM சகோ.சாம் மூலம் குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டும் S.M.S அனுப்பியிருந்தோம். 38 தலைவர்கள், போதகர்கள் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து வந்திருந்தார்கள். 14.06.2012 வியாழன் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடத்தப்பட்டது.

Rev.Stephen Christopher - C.E.O. TVGM இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி, Rev.Dr. Thomas Jaison –க்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றார்கள்.

இந்திய அரசாங்க சட்டத்தையும், Trust, Society Registration பற்றியும் அரசாங்கத்தில் எழுத்தின் மூலம் கொடுத்திருக்கும் சபைகள் வைத்திருக்க வேண்டிய 15 ரிஜிஸ்டர்களைப் பற்றி விளக்கி கூறி, கேள்விகளுக்கு பதில் கூறி Rev.Dr. Thomas Jaison அவர்கள் அனைவரையும் புத்துணர்வு பெற வைத்தார்கள்.

இந்த 15 ரிஜிஸ்டர் மாடல்கள், மற்றும் Rev.Dr. Thomas Jaison விளக்க செய்திகள் அடங்கிய 25 பக்க பைல் எங்களிடம் தயாராக உள்ளது.

**15 – சபை ரிஜிஸ்டர் மாடல் (தமிழ்) ரூ. 50 /– (நேரடியாக பெற)**
**(புரோபுஷனல் கொரியரில் அனுப்ப ரூ. 100/–) – விலாசம் பக்கம் 16**

14.06.2012 கலந்துரையாடலை **"சபைகளுக்கான அரசாங்கப் பதிவு, ஆவணங்கள் பராமரிப்பு"**என்ற தலைப்பில் 2 DVD ஆக வெளியிட உள்ளோம்.

கர்த்தருக்குச் சித்தமானால், 2012 **ஆகஸ்டு 9 ம்** தேதி காலை 9 – 6 P.M ஒரு நாள் மட்டும் **"சபை நிர்வாகமும் கணக்கு பராமரிப்பும்"** என்ற தலைப்பிலும்,

2012 **அக்டோபர் 11** ம் தேதி காலை 9 – 6P.M ஒரு நாள் மட்டும் **"சபை வளர்ச்சியும், பொருளாதார மேம்பாடும்"** என்ற தலைப்பிலும் பாஸ்டர் Fellowship நடத்தும் **100** பேருக்கு மட்டும் நடத்த வாஞ்சித்து ஜெபித்து வருகிறோம்.

இம்முகாமிற்கு விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் ஆகஸ்டு **1** ம் தேதி செல் : **89037 16163 -** க்கு முழு விலாசம், போன்,ஈமெயில், பாஸ்டர் Fellowship அல்லது **சபை பெயர்** உடன் **SMS** கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

P.T.Christopher - TVGM Founder.

# நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு . . .

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

நம் தேவன் நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையின் தேவனாக இருக்கிறார். அவர் நம்முடைய இக்கட்டான சூழ்நிலைகளில் நமக்கு உதவி செய்பவராயிருக்கிறார். நமக்கு உதவி செய்ய யாருமே இல்லையே என்று நினைக்கும்போது, கர்த்தர் இருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்கள் வாழ்வில் நம்பிக்கையை இழந்து காணப்பபடலாம். நீங்கள் விசுவாசி அல்லது அவிசுவாசியாக இருக்கலாம். யாராக இருந்தாலும் சரி, நம்பிக்கையற்ற நிலையில் காணப்பட்டால், கர்த்தருடைய கரம் உங்களோடு இருக்கிறது என்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள். நீங்கள் நம்பிக்கையில்லாத நிலையில் செய்ய வேண்டியதெல்லாம் கர்த்தருடைய பெலத்தையும், வழிநடத்துதலையும் நாட வேண்டும்.

சில உண்மைகளை நீங்கள் அறிய வேண்டும்.

**1.கர்த்தர் உங்களை ஏற்றுகொள்கிறார்.**

**2.நீங்கள் பரிசுத்தமாகவும், நீதிமானாகயிருக்கவும் கர்த்தர் விரும்புகிறார்.**

**3.நீங்கள் வேதவாக்கியத்துக்கு மனதாழ்மையாய் இருக்க விரும்புகிறார்.**

**4.கர்ததருக்கு கீழ்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.**

முதலாவதாக, கர்த்தர் நீங்கள் இருக்கும் வண்ணமாகவே உங்களை ஏற்றுக் கொள்கிறார். அவருடைய பார்வையில் நீங்கள் விசேஷித்தவர்கள். உங்கள் அந்தஸ்து, படிப்பு, நிறம்.... அவருக்கு முக்கியம் இல்லை. அவர் உங்களை அப்படியே ஏற்றுகொண்டு நேசிக்கிறார். அவரிடத்தில் நீங்கள் மன்றாடும்போது உங்களுக்கு செவிகொடுக்கிறார். நீங்கள் அவரை முழு இருதயத்தோடு தேட வேண்டும் என விரும்புகிறார்.

அநேக நேரங்களில் நீங்கள் பாவிகளாயிருக்கிறபடியால் உங்கள் ஜெபங்கள் கேட்கபடாது என்று நினைக்கலாம். உங்களுக்காக கிறிஸ்தவ பிரசங்கியார்கள் அல்லது தலைவர்கள் ஜெபிக்க வேண்டும் என்று நினைக்கலாம். ஆனால் தேவன் உங்கள் ஜெபங்களை தான் எதிர்பார்க்கிறார். அவர் மற்றவர்களின் ஜெபத்தைப் பார்க்கிலும் உங்கள் ஜெபங்களில் பிரியமாயிருக்கிறார்.

இரண்டாவதாக, நீங்கள் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும் என கர்த்தர் விரும்புகிறார். 1பேதுரு 1 : 13-16 இவ்வாறு வாசிக்கலாம். “உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே”. நீங்கள் பரிசுத்தமாய் இருப்பது மிக கடினமான

ஒன்று என்று நினைக்கலாம். ஆனால் நீங்கள் பரிசுத்தமாய் உங்களை காத்துகொள்ளும்போது இந்த உலகத்தையும், சாத்தானையும் மிக எளிதாக வெற்றி கொள்ளலாம். மேலும் கலா.5:16-17ல் வாசிக்கலாம். "பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்." 1பேதுரு 2:11 "பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி ..."

மனுஷர்கள் உங்கள் வெளிதோற்றத்தை பார்க்கிறார்கள். ஆனால் தேவன் உங்கள் இருதயங்களைப் பார்க்கிறார். நீங்கள் பரிசுத்தராய் மாற ஒவ்வொரு நாளும் எடுக்கும் முயற்சிகளை கண்ணோக்குகிறார். இந்த மாற்றம் அடைய காலங்கள் சென்றாலும் தேவன் உங்கள் முயற்சிகளை ஆசீர்வதித்து பரிசுத்தமாய் ஜீவிக்க உதவுவார்.

மூன்றாவதாக, நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு முன் மனதாழ்மையாய் இருக்க விரும்புகிறார். நீங்கள் உயர்ந்த நிலைமையில் அல்லது உயர்ந்த பதவியில் இருந்தாலும் கர்த்தர் முன் உங்களை தாழ்த்த வேண்டும். இன்று பிரச்சனைகள் தீர்ந்துவிட்டபின் அவருடைய வார்த்தைகளை மறந்து, நம்மை நாம் மேன்மை பாராட்டி கொள்கிறோம். நீதி.29:23 **"மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்; மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான்"**. ஆகவே தாழ்மையாய் இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

நான்காவதாக, நாம் கர்த்தருக்கு கீழ்படிய வேண்டும். நாம் அவருக்கு கீழ்படியும்போது தான் அவர் நமக்கு சகாயம் செய்வார். 1சாமு.15:22 "பலியைப் பார்க்கிலும் கீழ்படிதலும், ஆட்டுககடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" என்று வாசிக்கிறோம். ஆபிரகாம் கர்த்தருக்கு கீழ்படிந்ததினால் அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்பட்டதை ஆதியாகமம் 22ல் பார்க்கிறோம். ஆகவே கர்த்தருக்கும் அவரின் சத்தத்திற்கும் கீழ்படியுங்கள்.

அடுத்ததாக இயேசு கிறிஸ்துவின் மேல் மட்டும் நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனென்றால் இயேசு மட்டும் தான் நமக்கு நித்தியமான நம்பிக்கை கொடுக்க முடியும்.

**1.இயேசுகிறிஸ்து தான் நம் பாவங்களை மன்னிக்க முடியும்.**
**2.இயேசுகிறிஸ்து தான் நம்மை பிதாவோடு ஒப்புரவாக்க முடியும்.**
**3.இயேசுகிறிஸ்து தான் மரணத்தின்மேல் ஜெயம் கொடுக்க முடியும்.**

முதலாவதாக, நம்முடைய பாவங்களை கழுவ இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்பதை மறக்காதீர்கள். இயேசுகிறிஸ்து மனித குலத்துக்கு பிதாவால் கொடுக்கப்பட்ட வெகுமதி. நாம் எல்லோரும்

பாவம் செய்து கிருபையை இழந்து போனோம். 1யோவான் 1:8-10 “நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது” என்று வாசிக்கிறோம்.

அநேகர் பாவங்களை கண்டுகொள்ளாமல் பாவத்திலேயே வாழ்கின்றனர். சிலர் பலிகளை செலுத்தியோ அல்லது தான தர்மங்களை செய்தோ தங்கள் பாவங்களை மூட முயற்சிக்கின்றனர். ஆனால் இயேசுகிறிஸ்து மட்டுமே நம் பாவங்களை சுத்திகரிக்க வல்லவராயிருக்கிறார். எபே.1::7 “அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது” என்று வாசிக்கலாம்.

இரண்டாவதாக, இயேசுகிறிஸ்து தான் நம்மை பிதாவோடு ஒப்புரவாக்கமுடியும். மனுஷன் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ள வாஞ்சிக்கிறான். ஏனென்றால் மனிதன் தேவனுடைய சந்ததி என்பதை அப்.17:28ல் வாசிக்கலாம். “நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்”. ஆகவே இயேசுவின் மூலம் தான் பிதாவோடு ஒப்புரவாக்க முடியும். யோவான் 14:6 “அதற்கு இயேசு :நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்”.

இறுதியாக, இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து நமக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார். இன்று மரணத்தை குறித்த பயம் மனிதருக்கு இருக்கிறது. எனவே சிலர் தங்கள் மரணத்தை தள்ளிப் போட முயற்சிக்கின்றனர். ஆனால் நாம் மரணத்தை தைரியத்தோடு எதிர்கொள்ள வேண்டும். ஏனென்றால் இயேசுகிறிஸ்து மரணத்தை ஜெயித்தார். இதை எபி.2:14-15ல் வாசிக்கலாம். “ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்”

கர்த்தருடைய பிள்ளைகளே! நீங்கள் நம்பிக்கையில்லாமல் காணப்பட்டால் கவலைப்படாதீர்கள். இயேசுகிறிஸ்து உங்கள் நித்திய நம்பிக்கையாய் இருக்கிறார். அவருடைய கிருபையின்படி அவர் இரத்தத்தின் மூலம் நமக்கு பாவமன்னிப்பு உண்டு என்பதை அறிந்து கொள்ளுங்கள். உலக மனிதர்களுக்கோ அல்லது உலக காரியங்களுக்கோ பயப்பட வேண்டாம்.

இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கை உண்டு! கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தேவனுக்கே மகிமை!

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

**“இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்”. 1தெச.** 5:17

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள் :*** மாதந்தோறும் தமிழ்நாட்டில் குறிப்பிட்ட ஒரு யூனியனில் 100–கிராம ஊழியம் 5 நாட்கள் நடைபெறும். 5 நாட்கள் அவர்கள் கிராமங்களில் தங்கி 10,000 யோவான் சுவிசேஷப் புத்தகத்தை வீடு வீடாக இலவசமாக வழங்குகிறார்கள். ஒவ்வொரு மாதமும் இரண்டு 100–கிராம ஊழியம் நடைபெறவும், அநேக வாலிப தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொள்ளவும் ஜெபியுங்கள்.

***செவ்வாய் :*** எங்கள் ஊழியங்களான 100–கிராம ஊழியம், பின்தொடர்பணி ஊழியம், சபை கட்டுதல், சிறுவர் இல்ல ஊழியம், சீஷத்துவப் பயிற்சி, தையற் பள்ளி மற்றும் தொழுநோயாளர், பார்வை யற்றோர், விதவைகள் மத்தியில் நடை பெற்று வரும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். எல்லா ஊழியங்களிலும் தேவநாமம் மகிமைப்பட ஜெபியுங்கள்.

**புதன் : ‘நம் மத்தியில் வாழ்ந்த அவர் (இயேசுகிறிஸ்து)’** என்ற புத்தகங்கள் இருக்கின்றன. பள்ளி யிலும், கல்லூரிகளிலும் படிக்கும் மாணவ, மாணவிக ளுக்கு இலவசமாக கொடுக்க திட்டமிட் டுள்ளோம். இதன் மூலம் அநேக பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவை அறிய வழிவாசல்கள் திறக்கப்பட ஜெபியுங்கள்.

***வியாழன்:*** திருச்சி மற்றும் குண்டல் சிறுவர் இல்லத்தில் புதிதாக சேர்ந்தி ருக்கும் மாணவர்களின் படிப்புக்காக வும், ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள். ஏலீம் சிறுவர் இல்லத் திற்கு 3 வருட J.J. ஆர்டர் கிடைக் கவும், அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைக்கவும் ஜெபியுங்கள். மேலும் ஏலீம் சிறுவர் இல்லத்தின் கட்டுமான பணி தேவைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

***வெள்ளி :*** TVGM தலைமை அலுவலத்திற்கு (திருச்சி) அர்ப்பணிப் புள்ள ஊழியர்கள் கிடைக்க ஜெபி யுங்கள். **தேவையான ஆட்கள்:–** அட்மினிஸ்ட்ரேட்டர், அக்கவுண் டண்ட், கம்ப்யூட்டர் பயின்றவர்கள், வார்டன், டிரைவர், வாட்ச்மேன், சமை யல்கார அம்மா, கிராம ஊழியர்கள், ஜெபவீரர்கள், அறிமுகப்பணியாளர்.

***சனி :*** தேவனுடைய ராஜ்யத்தை விரிவாக்க உழைக்கும் மிஷனெரி ஸ்தாபனங்களையும், தனிநபர்களை யும் தேவன் ஆசீர்வதித்து, அவர்கள் தேவைகளை சந்திக்க ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** TVGM & TASOL ஊழியங் களுக்காக ஜெபிக்கும், கொடுக்கும், உழைக்கும் பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய
**TVGM தலைமை அலுவலக முகவரி**


BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**
"100-VILLAGE" SOMARASAMPETTAI
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628


| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, **ஜெபவீடு** கட்டுதல், முழுநேர ஊழியர் மற்றும் வட இந்திய ஊழியங்கள் – கைபிரதிகள், ஆலயம் கட்டுதல் | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian cheque/draft<br>SB. A/c : **12491010 -11947** Foreign cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| சிறுவர் இல்ல பிள்ளைகளின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், **மருத்துவ நிதி, தையற்மிஷின், தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி** | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian cheque/draft<br>SB. A/c : **12491010 - 24967** Foreign cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **TASOL**<br>**நிலம் வாங்குதல்**<br>**உயர் கல்வி நிதி** | **The Ambassador School of Learning - 80G** வரி விலக்கு<br>SB. A/c : **12491010 - 38110** Indian cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **பத்திரிகை சந்தா**<br>**அச்சகம்** | TVGM Publication<br>SB. A/c : **12491010 - 25265** Indian cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |

**குறிப்பு :** ஸ்தாபனம் பெயரில் காணிக்கைகளை அனுப்ப முடியாவிட்டால் Stephen Christopher S.B. A/c . No : **10848511949** State Bank of India Code : 930 Main Branch, Trichy, India. என்ற பெயரிலும் செக், டிராப்ட் எடுத்து அனுப்புங்கள்


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher
from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai,
Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers,
C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.
**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 066 / 2012 - 2014
Posting Date 25th at Trichy RMS



திருச்சி – சோமரசம்பேட்டை ஏலீம் சிறுவர் இல்லத்தில் கட்டப்பட்டு வரும் நூலகம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

**நன்றி :**
**சகோ. மைக்கேல் – யு.கே.**



03.06.2012 அன்று சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் **பால்கடை**(ஒட்டன்சத்திரம் அருகில்) கிராமத்தில் தேவசெய்தியளித்தல்.

To

**Return Requested:** Tamil Village Gospel Mission
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.